பக்கங்கள்:10 | விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 31 சனிக்கிழமை 14.05.2022 கதிர் 190

### இது ரகசியம் அல்ல!

மொட்டுக் கட்சிக் கூட்டணி அரசிலிருந்து பிரிந்த தரப்புக்கள் எவையும் ரணிலின் புதிய அரசில் பங்கு பற்றுவதில்லை என்ற முடிவை எடுத்திருப்பதை அடுத்து ரணிலின் அரசுக்கு பெரும்பான்மை உள்ளதா, அது தப்பிப் பிழைக்குமா என்ற ☞2






# இலங்கைக்கான உதவிகளைப் பெற சர்வதேசக் கூட்டமைப்பு உருவாக்கம்

## ஜப்பான், அமெ., இந்தியா, சீனா, பிரி. தூதுவர்களுடன் புதிய பிரதமர் ரணில் நேற்று பேச்சைத் தொடங்கினார்

கொழும்பு, மே 14

பாரிய பொருளாதார நெருக்கடியில் சிக்குண்டிருக்கும் இலங்கைக்கு நிதி உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கான சர்வதேசக் கூட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதைப் பிரதான நோக்கமாகக் கொண்டு ஜப்பான், அமெரிக்கா மற்றும் சீனா ஆகிய நாடுகளின் இலங்கைக்கான தூதுவர்களையும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகரையும் புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். ☞2

## மு.ப.6 முதல் பி.ப.6 வரை இன்று ஊரடங்கு தளர்வு




நாட்டில் ஏற்பட்ட வன்முறைகளைத் தொடர்ந்து நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டம் இன்று 14ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 மணிக்குத் தளர்த்தப்பட்டு மீண்டும் இன்று மாலை 6 மணிக்கு அமுல்படுத்தப்பட்டு நாளை 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 5 மணிக்குத் தளர்த்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## போராட்டத்தை அடக்க முயன்ற முறையும் தவறு ரணில் பிரதமரானதும் தவறு என்கின்றார் சங்கரி

கொழும்பு காலி முகத்திடலில் இடம்பெற்ற ஜனநாயகப் போராட்டத்தை அடக்க முற்பட்ட முறை தவறு என தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள அவரது கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் – ☞06



## அத்தியாவசியப் பொருள்களின் பற்றாக்குறை; தீர்வு குறித்து ஆராயக் குழு அமைத்தார் ரணில்

### எல்லோரும் அவரின் ஐ.தே.க. நிர்வாகிகள் தாம்



நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியை அடுத்து ஏற்பட்டுள்ள அத்தியாவசியப் பொருள்களின் பற்றாக்குறையை உடனடியாகக் குறைப்பதற்கும் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கும் உரிய நடவடிக்கைகளை ஆராய்ந்து முன்மொழிவதற்கு என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விசேட குழுவொன்றை நியமித்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய மக்களுக்கு ☞2

## அடி காயங்களினால்தான் எம்.பி. உயிரிழந்திருக்கிறார்

### பிரேத பரிசோதனையில் கண்டறிவு

கடந்த திங்கட்கிழமை நாட்டில் ஏற்பட்ட வன்முறைகளின் போது உயிரிழந்த பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துக்கோரள தாக்குதலினால் ஏற்பட்ட காயங்களினாலேயே உயிரிழந்துள்ளார் என பிரேத பரிசோதனையில் தெரிய வந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

நிட்டம்புவ பிரதேசத்தில் ஏற்பட்ட அமைதியின்மையின் போது நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துக்கோரள பொதுமக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடாத்திவிட்டு கட்டடம் ஒன்றில் தஞ்சம் ☞2

## ராஜபக்ஷக்களைக் காப்பாற்றுவது எனது நோக்கம் அல்ல; மக்களின் வயிற்றுப்பசிக்கு உடன் தீர்வு காண்பதே இலக்கு

### அலரி மாளிகையில் நேற்று கடமைகளைப் பொறுப்பேற்ற பின்னர் முழங்கினார் ரணில்

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட ராஜபக்ஷக்களைக் காப்பாற்றவே நான் பிரதமர் பதவியைப் பொறுப்பேற்றேன் என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கருத்துக்களை வெளியிடுகின்றனர். ராஜபக்ஷக்களைக் காப்பாற்றுவது எனது நோக்கம் அல்ல என்பதை அந்த எம்.பிக்களிடம் கூறிவைக்க விரும்புகின்றேன்.

– இவ்வாறு புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பாரிய பொருளாதார நெருக்கடிகளால் நாட்டு மக்கள் மூன்று வேளைகளிலும் உணவை உட்கொள்ள முடியாத அவல நிலை ஏற்பட்டுள்ளது. மக்களின் வயிற்றுப் பசிக்கு உடனடியாகத் தீர்வு காண்பதே எனது குறிக்கோள் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

புதிய பிரதமராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் நேற்றுமுன்தினம் மாலை பதவியேற்ற ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் அலுவலகத்தில் நேற்றுக் காலை தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார். ☞2



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
கேள்விகள் ஊடகங்களில் பரப்பப் படுகின்றன.

ஆனால் அது தப்பிப் பிழைக்கும், 'நித்திய கண்டம் பூரண ஆயுசு' என்ற கணக்கில் அது ஓடும். பெரும்பான்மை இல்லை என்ற காரணத்துக்காக அது தோற்கடிக்கப்பட மாட்டாது. அப்படி நான் கூறுவதற்கு காரணம் உண்டு.

ரணிலின் அரசைக் கொள்கை அள வில் எதிர்க்கும் கட்சிகள் கூட – பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, ஜே.வி.பி. போன்றவை கூட – ரணிலின் அரசுக்கு நாடாளுமன்றத்தில் பெரும் பான்மை உள்ளதா என்ற சவாலை சபை யில் முன்வைக்கப் போவதில்லை என்பது உறுதியாகத் தெரிந்தமையால்தான் அப்படி உறுதியாகக் குறிப்பிட்டேன்.

எனினும், ரணிலின் அரசை வீழ்த்தும் முயற்சி நாடாளுமன்றத்திற்கு வெளியில் முழு மும்மரமாக முன்னெடுக்கப்படுகின் றது என்று தெரிகிறது.

மகாநாயக்கர்களின் ஆதரவுடன் இயங்கும் வண. ஓமல்பே சோபித தேரர் உட்பட மதத்தலைவர்கள் குழுவினர், கொழும்புப் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் போன்றோர் இதில் மும்முரமாக உள்ளனர்.

இந்த முயற்சியின் ஒரு கட்டமாக அடுத்த வாரத்தில் மீண்டும் பல நூறு பிக் குமார்கள் கொழும்பில் ஒன்று கூடி ரணில் கலைப்பு மதத் திருவிழாவை நடத்த இருக்கின்றார்கள் என்று கூறப்பட் டது.

கட்சி சாராத – நடுநிலை நீதியிலான – பொதுப் பிரமுகர் ஒருவரை எம்.பியாக்கி, அவரின் கீழ் ஓர் இடைக்கால அரசை அமைக்க வேண்டும் என்பதே இந்த மதத் தலைவர்களின் வேண்டுகோளாக இருக் கின்றது.

அப்படி ஒருவர் அடையாளம் காணப் பட்டு, அவரைப் பிரதமராக ஏற்றுக் கொள்ள இணக்கம் காணப்படுமானால், அந்தப் பிரமுகர் நாடாளுமன்றம் செல் வதற்காக ஜே.வி.பியின் தேசியப்பட்டியல் உறுப்பினரான கலாநிதி ஹரிராணி அமரசூரிய பதவி விலகி இடம் கொடுப்பார் என்றும் –

இது தொடர்பாக மதத் தலைவர்களுக் கும் ஜே.வி.பித் தலைவர்களுக்கும் இடை யில் இணக்க நிலை ஏற்பட்டிருக்கின்றது என்றும் – தெரியவந்தது.

அத்தகைய பொது நிலைப் பிரமுகராக முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவின் பெயர் முன்னி லையில் பரிசீலனையில் உள்ளது.

பொதுப் பிரமுகராகப் பிரதமர் பத வியை ஏற்றுச் செயற்பட ஷிராணி பண் டாரநாயக்கா தரப்பிலிருந்தும் பச்சைக் கொடி காட்டப்பட்டு விட்டதாக அறிந்தேன்.

நல்ல சமிக்ஞை. முதலில் ரணில் பதவி விலகினால்தான் இது சாத்தியம்.

ஆனால், பதவியேற்றமணியிலிருந்து நாட்டின் பொருளாதார நிலையை மேம் படுத்துவதில் ஓர் அதிரடி பாய்ச்சலைக் காட்டுவேன் என்ற பாணியில் கருத்தி யலை உருவாக்கி வரும் ரணிலை, அந் தப் பதவியில் நிலை கொள்ள அனுமதிக் கும் ஒவ்வொரு மணித்துளியும் அவர் தமது பதவி நிலையை இறுப்படமங்காக உறுதிப்படுத்திக் கொண்டு இருப்பார் என்பது நிச்சயம்.

இதற்கிடையில் –

வெளியே வராமல் பதுங்கியிருக்கும் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ குறித்து இந்திய ஆங்கில ஊடகமொன் றுக்குத் தாம் அளித்த நீண்ட பேட்டியில் சில அதிர்ச்சி தரும் தகவல்களை சுமந் திரன் எம்பி. வெளியிட்டு இருக்கின்றார். அவை கவனிக்கத்தக்கவை. சுமந்திரன் வெளியிட்ட தகவல்கள் இவைதான்:–

கடந்த திங்களன்று பதவியைத் துறந்த முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜ பக்ஷ இப்போது மறைந்திருக்கிறார். அவர் திருகோணமலைக் கடற்படைத் தளத்தில் இருக்கிறார் என்றார்கள். இப் போது அவர் யாழ்ப்பாணம், பலாலி விமா னப்படைத் தளத்தில் உள்ளார் என சில தகவல்கள் தெரிவிக்கின்றன. பாதுகாப்புக் கருதி அவரை இங்கும் அங்குமாகக் கூட் டிக்கொண்டு சுற்றித் திரிகிறார்கள். அவ் வளவு தூரத்துக்கு அரசியல் நெருக்கடி உள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ நாட்டை விட்டுத் தப்பியோடலாம் என்ற சிரத்தை – கவலை – பலருக்கும் உள்ளது என்பது உண் மைதான். மஹிந்தவும் அவரது குழுவி னரும் நாட்டைவிட்டு வெளியேறத் தடை விதிக்கும் உத்தரவு ஒன்றை சட்டமா அதி பரும் இலங்கைச் சட்டத்தரணிகள் சங்க மும் நீதிமன்றத்தை நாடி பெற்றிருக்கின் றமை குறிப்பிடத்தக்கது.

ஆகவே, அவர் வழமையான மார்க் கங்களில் நாட்டை விட்டு வெளியேற முடி யாது. ஆனால் அவரின் சகோதரர்தான் நாட்டின் ஜனாதிபதி. எனவே அவர் திடீ ரெனக் காணாமல் போகலாம். கப்பல் ஒன்றில் ஏறி விலகிப் போய் விடலாம். அதற்கு நிறைய வாய்ப்பு உண்டு. அவர் அப்படிச் செய்யக் கூடும்.

அவர் முதலில் திருகோணமலைக் கடற்படைத் தளத்துக்குச் சென்றார். இப் போது அவர் யாழ்ப்பாணத்திலுள்ள விமா னப்படைத் தளத்துக்குச் சென்றுள்ளார். அதற்கும் கடற்கரை முகப்பு உண்டு. அது தான் அங்கு அவர் சென்றமைக்குக் கார ணமாக இருக்கலாம். ஆகவே, அவர் நாட்டை விட்டு வெளியேறுவதற்குத் தடை விதிக்கும் நீதிமன்றத் தடை உத்தரவு செயல் தாக்கம் உள்ளதாக இருக்கும் என்று நான் கருதவில்லை. அதுவும் நாட் டின் ஜனாதிபதியாக அவரது சகோதரர் இருக்கும் நிலையில், அவரே ஒழுங்கு படுத்தி ஏற்பாடு செய்தால் இந்தத் தடை உத்தரவு நடைமுறையில் செல்லுபடியற் றதாகிவிடும். இதுதான் இங்கு உள்ள நிலைமை.

இத்தகைய முரட்டுத்தனமான அர சுடன் போய் இணைந்து இருக்கின்றார் ரணில் விக்கிரமசிங்க. தான் பொறுப்புக் கூறவேண்டிய குற்றங்களுக்குப் பதில் கூறாமல் மஹிந்த ராஜபக்ஷ வெளியே தப்பிப் போகக் கூடாது என்பதுதான் எனது நிலைப்பாடு.

ஆனால், ஆபிரிக்கா போன்ற நாடு ஒன்றுக்கு அவர் தப்பிச் சென்று தலை மறைவாக ஒளித்தால் நான் ஆச்சரியப் பட மாட்டேன்.

அவர் உகண்டா போகலாம். அங்கு தான் பெரும் தொகையான பணம் கடத் தப்பட்டு குவிக்கப்பட்டதாகக் கூறப்படு கின்றது. பல தலைமுறைகளுக்கு அவை போதும் என்பதால், அவர்கள் அங்கு போகக்கூடும். அங்குள்ள அந்தப் பணம் ராஜபக்ஷக்களினுடையவை என்று இங்கு பேச்சுகள் அடிபடுகின்றன. அவர்க ளிடம் பணம் இருப்பதால் அவர்கள் யாரையும் விலைக்கும் வாங்கலாம். எங் கும் போகலாம். இது விடயத்தில் அவர்கள் சீனாவினுடையதோ அல்லது இந்தி யாவினுடையதோ உதவியைக் கோர மாட்டார்கள். அதற்கு வாய்ப்பில்லை. அவர்கள் தப்பிப் போக முடிவெடுத்தால் உலக வரைபடத்தில் இல்லாத ஓர் இடத் துக்குத்தான் தப்பிச்சென்று தங்குவர். – என்று கூறியிருக்கிறார் சுமந்திரன்.

கொழும்பு அரசியல் களம் தொடர்ந் தும் சூடுபிடித்துள்ளது என்பதே இப் போதைய லேட்டஸ்ட் நிலைமை.

(வளரும்)

---

## இலங்கைக்கான உதவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
நேற்றுக் காலை பிரதமர் அலுவல கத்தில் தனது கடமைகளைப் பொறுப் பேற்றுக் கொண்ட பிரதமர் ரணில் விக்கி ரமசிங்க நாட்டின் பொருளாதாரத்தை மீளக்கட்டி எழுப்புவதே தனது ஒரே நோக் கம் எனக் கூறி இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, ஜப்பானியத் தூதுவர் மிசுகோஷி ஹிடேகி, அமெரிக்கத் தூது வர் ஜூலி ஜே.சங் மற்றும் சீனத் தூதுவர் ஜி சியான் லியாங் ஆகியோரைச் சந் தித்து இலங்கையின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கான ஆரம்பகட்ட பேச்சுக் களை நடத்தினார்.

இந்திய உயர்ஸ்தானிகருடனான கலந்துரையாடலின்போது பொருளா தாரத்தை மீட்டெடுப்பது தொடர்பாக மேற் கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. இதன்போது இலங்கைக்குத் தொடர்ந்து உதவி அளிப்பதாக இந்திய உயர்ஸ் தானிகர் உறுதியளித்தார்.

இலங்கையின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கு ஜப்பான் இலங் கைக்குத் தொடர்ந்தும் ஆதரவளிக்கும் என ஜப்பானியத் தூதுவர் நேற்றைய சந்திப்பின் போது உறுதி தெரிவித்தார். மேலும் இலங்கையின் நிலைமைகள் தொடர்பில் கலந்துரையாடித் தீர்மானம் எடுப்பதற்காக இன்று தாம் ஜப்பான் செல் லவுள்ளார் என ஜப்பானியத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பொருளாதாரத்திற்கு உதவுவதற்காக ஏனைய வெளி நாடுக ளின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர் பில் ஜப்பான் தூதுவரும் இந்திய உயர் ஸ்தானிகரும் பிரதமருடன் கலந்துரை யாடினர்.

அமெரிக்காவின் திறைசேரிக் குழுவி னர் இலங்கைக்கு மேற்கொள்ளவுள்ள விஜயம் தொடர்பில் பிரதமர் அமெரிக்கத் தூதுவருடன் கலந்துரையாடினார். மேலும் 19 ஆவது திருத்தச் சட்டம் மற்றும் நாடாளுமன்றத்தில் கண்காணிப்புக் குழுக்களைப் பலப்படுத்துவது தொடர் பிலும் இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டது.

இலங்கைக்குத் தொடர்ந்தும் ஆதரவ ளிப்பதற்குச் சீனா விருப்பம் கொண்டுள்ளது என பிரதமருடனான சந்திப்பின் போது சீனத் தூதுவர் தெரிவித்தார். அத்துடன் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள உதவி களை சீனா மீளாய்வு செய்யும் எனவும் அவர் கூறினார்.

பிரித்தானிய தூதுவர் மீண்டும் நேற்று இங்கிலாந்துக்கு செல்வதற்கு முன்னர் பிரதமர் அவருடனும் கலந்துரையாடி னார். இலங்கையின் நிலைமைகள் குறித்து பிரித்தானியா அரசாங்கத்திற்கு விளக்கம் அளிப்பதற்கு இதன்போது தி ட்டமிடப்பட்டது.

பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கையை மீட்டெடுப்பதற்கு இலங் கைக்கு நிதி உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கான சர்வதேசக் கூட்டமைப்பு ஒன்றை உருவாக்குவது தொடர்பில் இந்தக் கலந்துரையாடல்களின் போது கவனம் செலுத்தப்பட்டது என பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்தச் சந்திப்புகளை அடுத்து பல உலக நாடுகளும் இலங்கைக்கு உதவு வதற்கு முன்வந்துள்ளன எனத் தெரிவிக் கப்பட்டது.

---

## அடி காயங்களினால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
அடைந்தார் எனவும், பின்னர் பொதுமக் கள் அந்தக் கட்டடத்தைச் சுற்றிவளைத் தமையால் அவர் தனது துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார் எனவும் முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இவரின் மரணம் தொடர்பில் வத்துபிட் டிவல வைத்தியசாலையில் சட்ட வைத் திய அதிகாரியினால் பிரேத பரிசோதனை நடைபெற்றது.

இவரின் உடலில் தாக்குதல் காரண மாக பெரிய காயங்கள் உள்ளாகியுள்ளன. இந்தக் காயங்கள், எலும்பு முறிவுகள் மற் றும் உள் இரத்தப்போக்கு காரணமாகவே இவர் உயிரிழந்துள்ளார். இவரின் உட லில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் எவை யும் இல்லை எனப் பிரேத பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் இவரது பாதுகாப்பு அதிகாரி யின் உடலில் துப்பாக்கிச் சூட்டு காயம் உள்ளது எனவும் அவரது உடலில் தோட்டா ஒன்று காணப்பட்டது எனவும் பாதுகாப்பு அதிகாரியும் கடுமையாகத் தாக்கப்பட்டு பலத்த காயங்களுக்கு உள் ளாகியுள்ளார் எனவும், இதனால் மூளை யில் ரத்த கசிவு ஏற்பட்டுள்ளது எனவும் பிரேத பரிசோதனை அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினரோ அல் லது அவரது பாதுகாப்பு உத்தியோகத்தரோ தற்கொலை செய்து கொள்ளவில்லை என்றும் கடுமையாகத் தாக்கப்பட்டமை யால் ஏற்பட்ட காயங்களினாலேயே உயி ரிழந்துள்ளனர் என்றும் வைத்தியசாலை யின் சட்ட வைத்திய அதிகாரி தெரிவித்துள் ளார் என்றும் மேலும் குறிப்பிடப்பட்டுள் ளது.

---

## அத்தியாவசியப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
அத்தியாவசிய உணவுப் பொருள்களைத் தட்டுப்பாடின்றி வழங்குவது தொடர்பில் உரிய துறையினருடன் கலந்துரையாடி ஆலோசனைகளை வழங்குவதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன மற்றும் கட்சியின் செயலாளர் பாலித ரங்கே பண்டார ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அத்தியாவசிய மருந்துகளின் தட்டுப் பாடு தொடர்பில் கலந்துரையாடுவதற் காக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜயவர்த்தனவும் உரம் தொடர்பான பிரச்சினைகள் தொடர் பில் ஆராய்வதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் உதவித் தலைவர் அகில விராஜ் காரியவசமும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனம் மற்றும் எரிபொருள் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப் பாளர் சாகல ரத்நாயக்க ஆராயவுள்ளார்.

இந்தக் குழுவுக்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் தங்களுக்கென ஒதுக் கப்பட்ட துறைகள் தொடர்பில் காணப்படும் பிரச்சினைகளைக் கண்டறிந்து கலந்து ரையாடல்களை நடாத்தி அவற்றுக்கான தீர்வுகளைக் காண்பதற்குரிய ஆலோச னைகளையும் பிரதமருக்கு அறிக்கைப் படுத்துவார்கள் எனத் தெரிவிக்கப்பட் டுள்ளது.

---

## ராஜபக்ஷக்களைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
அதன்பின்னர் ஊடகங்களிடம் கருத் துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரி வித்தவை வருமாறு: –

நாட்டையும் மக்களையும் மீட்டெ டுக்கவே பிரதமர் பொறுப்பை ஏற்றேன். அதற்காக அனைத்துக் கட்சிகளினதும் ஒத்துழைப்பையும் ஆதரவையும் நான் எதிர்பார்க்கின்றேன்.

இலங்கைக்கு வெளிநாடுகள் உதவ முன்வந்துள்ளன. எனவே, பொருளாதார நெருக்கடிக்கு நாம் விரைந்து தீர்வுகாண முடியும். துயரங்களிலிருந்து மக்களை மீட்டெடுக்க முடியும்.

உண்மையான மக்கள் பிரதிநிதிகள் எனது வேலைத்திட்டங்களுக்கு ஆதரவை வழங்க வேண்டும் – என்றார்.




காலைக்கதிர் Kalaikkathir

# அரசியல் நிலைமையை சாதகமாகப் பயன்படுத்துமளவுக்கு எந்த தமிழ்கட்சியும் வங்குரோத்து நிலைக்கு போகவில்லை!

## சம்பந்தன் காட்டத்துடன் கருத்து



நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங்களை சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் அளவுக்கு எந்தவொரு தமிழ் அரசியல் கட்சியும் வங்குரோத்து நிலைக்குச் செல்வதில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஊடகவியலாளர் ஒருவருக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தென்னிலங்கையில் அரசியல் தீப்பற்றி எரிந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் தமிழ் அரசியல் கட்சிகள் சேற்றில் மீன்பிடித்து கட்சி அரசியலில் ஈடுபட வேண்டிய அவசியமில்லை என இரா.சம்பந்தன் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

நாட்டில் இடம்பெறும் ஒவ்வொரு நடவடிக்கைகளும் நிகழ்வுகளும் அரசியல் தீர்மானங்களும் ஜனநாயகம், சட்டம் ஒழுங்கு என்பவற்றுக்கு அமைவாக அமைய வேண்டும்.

போராட்டங்களின் போது கொலைகள், தீ வைப்பு, சொத்து சேதம் என்பன இடம்பெறக்கூடாது எனத் தெரிவித்துள்ளார்.

2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்த போது தென்னிலங்கை மக்களால் மகத்தான மனிதர் என போற்றப்பட்ட மஹிந்த ராஜபக்ஷவை பதவியில் இருந்து தூக்கி எறிய வேண்டும் என்ற கோபத்தில் தற்போது தென்பகுதி மக்கள் உள்ளனர்.

தமிழ் மக்கள் வெறுப்பு அரசியலை விரும்பவில்லை என்றும் தமிழ் மக்களின் உரிமைகளை பாதுகாக்கும் மற்றும் அவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் அரசியல் கட்டமைப்பையே விரும்புவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், தமிழ் மக்களும் ராஜபக்ஷ ஆட்சியை ஒருபோதும் விரும்பியதில்லை என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## வங்கக்கடலில் தாழமுக்கம்: கடற்தொழிலாளர்கள் பாதிப்பு

வங்கக்கடலில் தற்போது ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாகக் கடல் அலையில் உயரமும் வேகமும் அதிகரித்துள்ள நிலையில், அம்பாறை மாவட்டத்தில் கடற்தொழிலாளர்கள் பாரிய பாதிப்புகளை எதிர்நோக்கியுள்ளனர்.

தாழ் அமுக்கம் காரணமாகக் கடல் அலை வழமைக்கு மாறாக முன்னோக்கி வந்துள்ளமையால் கடற்தொழிலாளர்கள் கடலுக்குச் செல்லாமல் தங்களது உடைமைகளைப் பாதுகாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

அத்துடன் கடற்தொழிலாளர்களின் தங்குமிடம் மற்றும் பொதுமக்கள் ஒன்றுகூடும் பகுதிகளைக் கடல் அலைகள் சூழ்ந்துள்ளதுடன், போக்குவரத்து மேற்கொள்ளும் பாதைக்கு அருகில் கடலலை வந்துள்ளதால் அப்பகுதியில் வசிக்கும் மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

மேலும் கடற்தொழிலாளர்கள் தங்களது படகுகளைப் பாதுகாப்பான இடங்களுக்கு இழுத்துச் செல்வதுடன், கடலின் அலை அதிகம் வருவதால் கடற்தொழிலாளர்களின் அன்றாட தொழில் நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

வழமைக்கு மாறாகக் கடல் அலைகளின் தாக்கம் அதிகரித்து கடல் நீர் கடற்கரையிலிருந்து சுமார் 100 மீற்றர் தூரத்துக்கு அப்பால் உள்ள நிலப் பகுதிக்குள்ளும் மக்கள் குடியிருப்புப் பிரதேசத்துக்குள்ளும் கடல் நீர் உட்புகுந்துள்ளது.

நிந்தவூர், அக்கரைப்பற்று, மருதமுனை, பெரிய நீலாவணை, காரைதீவு பகுதியில் கடல்நீர் கடற்கரைப் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட பிரதான காபட் வீதியையும் தாண்டி நிலப்பரப்பில் புகுந்தமையால் கடற்கரையில் தரித்து வைக்கப்பட்ட படகுகள், சிறிய ரக வள்ளங்கள் மற்றும் கடற்றொழில் உபகரணங்கள் போன்றன கடல் நீரில் அடித்துச் செல்லப்பட்டன எனவும் கடற்தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் கடந்த சில தினங்களுக்கு முன்னர் மட்டக்களப்பு, கதிரவெளி, வாகரை கடலில் நண்பர்களுடன் குளிக்கச் சென்ற மூவரும் முல்லைத்தீவு – அளம்பில், செம்மலை கடலில் குளிக்கச் சென்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் மூவரும் அம்பாறை – மருதமுனை பகுதியில் இரு நண்பர்களும் கடலில் குளிக்கச்சென்ற நிலையில் சமகாலத்தில் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## தென்கிழக்கு பல்கலைகல்விசாரா ஊழியர்கள் பணிப் பகிஷ்கரிப்பில்!



தென்கிழக்குப் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் நேற்று (வெள்ளிக்கிழமை) தொடக்கம் 48 மணித்தியால பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர் எனத் தென்கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் தலைவர் எம்.எம்.நெளபர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு – காலிமுகத்திடல் மக்கள் போராட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதல்களைக் கண்டித்து இந்தப் பணிப் பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை பல்கலைக்கழக ஊழியர் சங்கங்களின் கூட்டுக்குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் 48 மணிநேர தொடர்ச்சியான அடையாள பணிப்பகிஷ்கரிப்பு போராட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஊரடங்குச்சட்டம் தளர்த்தப்படும் பட்சத்திலும் இந்தப் பணிப்பகிஷ்கரிப்பு தொடர்ச்சியாக 48 மணி நேரம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. – இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கைக்கு நிவாரண பொருள்களை அனுப்பும் பணி தமிழகத்தில் தீவிரம்

இலங்கைக்கு நிவாரண பொருள்களை அனுப்பும் பணிக்கு 4 ஐஏஎஸ் அதிகாரிகள் கொண்ட குழுவை அமைக்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு தமிழக அரசு சார்பில் அத்தியாவசியப் பொருள்களை அனுப்பி வைக்க மத்திய அரசு அனுமதி வழங்கக் கோரி கடந்த சட்டப்பேரவை கூட்டத் தொடரில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பொருளகள் அனுப்ப இந்திய மத்திய அரசு அனுமதி வழங்கியது.

இதன்படி, ரூ.80 கோடி மதிப்பிலான 40 ஆயிரம் தொன் அரிசி, ரூ.28 கோடி மதிப்பிலான 137 மருந்து பொருளகள் ரூ.15 கோடி மதிப்பில் குழந்தைகளுக்கு வழங்க 500 தொன் பால் மா ஆகியவற்றை இலங்கை மக்களுக்கு தமிழக அரசு சார்பில் அனுப்பி வைக்கப்படவுள்ளது.

இந்நிலையில் இந்தப் பொருள்களை அனுப்பி வைக்கும் பணிகளை மேற்கொள்ள 4 ஐஏஎஸ் அதிகாரிகள் அடங்கியகுழு அமைக்கதமிழகஅரசுஉத்தரவிட்டுள்ளது.




இதன்படி வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை செயலர் ஜெசிந்தா லாலரஸ், நுகர்பொருள் வாணிப கழக மேலாண்மை இயக்குநர் பிரபாகர், ஆவின் மேலாண் இயக்குநர் சுப்பையன், மருத்துவப் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் தீபக் ஜேக்கப் ஆகியோரை நியமித்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

## இலங்கையர்களுக்கு விசா வழங்குவதை இந்தியா நிறுத்தியதென்ற செய்திக்கு மறுப்பு

கொழும்பு, மே 14

இலங்கையில் உள்ள இந்திய துணைத் தூதரகம் அல்லது இந்திய உதவி உயர்ஸ்தானிகராலயம் விசா வழங்குவதை நிறுத்தியுள்ளதாக வெளியான செய்தியை இந்திய உயர்ஸ்தானிகராலயம் திட்டவட்டமாக மறுத்துள்ளது.

உயர் ஸ்தானிகராலயம் வெளியிட்டுள்ள அறிக்கையில் –

கடந்த சில நாளகளாக, விசா பிரிவின் பணியாற்றும் பெரும்பாலானவர்கள் இலங்கை பிரஜைகள் என்பதால் அலுவலகத்துக்கு வர முடியாததன் காரணமாக, செயற்பாடுகளில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் எங்கள் செயல்பாட்டை விரைவில் இயல்பு நிலைக்குத் திரும்பப் பெறுவதற்கு நாங்கள் முயற்சி செய்கிறோம் எனவும் இலங்கையர்களுக்கு இந்தியாவுக்கான பயணத்தை எளிதாக்குவதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.

இந்தியர்கள் இலங்கையில் இருப்பதைப் போலவே இலங்கையர்களும் இந்தியாவிற்கு செல்ல முடியும்' – என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர்களுக்கான பொதுக்கூட்டம்

கல்வி அமைச்சின் 2013/7 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு அமைவாக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் 2022/2023 ஆம் ஆண்டிற்கான பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கு பழைய மாணவர் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கான பொதுக் கூட்டம் 15.05.2022 ஞாயிற்றுக்கிழமை மு.ப 8.45 மணிக்கு கல்லூரியின் சபாலிங்கம் அரங்கில் நடைபெறும். எமது கல்லூரியின் அனைத்துப் பழைய மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

அதிபர்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## யார் மீது யார் சவாரி?

**அரசியலில் அனுபவமும் முதிர்ச்சியுமற்றவர் என்று விமர்சிக்கப்பட்டு வரும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசியல் தந்திரோபாயமாகச் செயற்பட்டு – கனகச்சிதமாகக் காய் நகர்த்தி – ஒரு கல்லில் பல மாங்காய்களை வீழ்த்தியிருக்கின்றார்.**

**ஒற்றை ஆசனத்துடன் நாடாளுமன்றுக்கு வந்த ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக நியமித்துத் தமக்கு வந்த பல தலையிடிகளின் வீரியத்தை அவர் குறைத்திருக்கின்றார் என்றே கூற வேண்டும்.**

**அவர் பதவியேற்று, அதைத் தொடர்ந்து அவரின் மொட்டுக் கட்சி அதிகாரத்துக்கு வந்த காலம் தொட்டே, வெளியே வெளிப்படுத்த முடியாத பல உள்வீட்டுச் சிக்கல்கள் அவரை நெருக்கடிக்குள் – இக்கட்டுக்குள் – மாட்டி வைத்திருந்தன என்பது உண்மை.**

**அவர் ஜனாதிபதித் தேர்தலில் நின்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி அவருக்குப் புதியது என்றாலும் – அந்தக் கட்சியே புதியது என்றாலும் – அதை ஆக்கிரமித்திருந்தவர்கள் எல்லாம் பெரும்பாலும் பழைய பெருச்சாளிகளே.**

**அலிபாபா கூட்டத்தினர் போல, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து ஒன்றாக மொட்டுக் கட்சி மலர்வோடு அதற்குள் புகுந்தவர்களே அவர்கள்.**

**அந்தக் கில்லாடிப் பேர்வழிகளின் அசைக்க முடியாத இரும்புச் சட்டகக் கட்டமைப்புக்குள்தான் தமது அரசைக் கட்டமைக்க வேண்டியவராக இருந்தார் கோட்டாபய.**

**வெளியில் இருந்தும், தமது 'வியத்மக', 'எளிய' போன்ற அமைப்புகளில் இருந்தும் சில புத்திஜீவிகளையும், துறைசார் நிபுணர்களையும் இந்த ஆட்சிக் கட்டமைப்புக்குள் அவரால் நுழைக்க முடிந்ததாயினும் அவர்களாலும் சோபிக்க முடியவில்லை.**

**ஒன்றில் அவர்களும், பன்றியோடு சேர்ந்த கன்று போலாயினர். அல்லது பழைய பெருச்சாளிகளின் அரசியல் தகிடுதம்களைப் பார்த்து மலைத்து, அவற்றுக்குத் தம்மால் ஈடு கொடுக்க முடியாது என்று கண்டு மெல்ல நழுவினர்.**

**இருக்கின்ற 'மலை விழுங்கி மகாராஜாக்களை' வைத்துக் கொண்டு, அரசைக் கொண்டு நடத்தினால் கடைசியில் நாடு இப்படித்தான் திவாலாகும் என்பது ஜனாதிபதி கோட்டாபயவுக்கு நன்கு தெரிந்தே இருந்தது. அவர் அறியாதவராக இருக்கவில்லை. ஆனால் செயலற்றவராக – செயலாற்ற வக்கற்றவராக – இருந்தார்.**

**இப்போதைய மக்கள் எழுச்சி, புரட்சி, கிளர்ச்சி, சீற்றம் போன்றவை அவற்றின் விளைவு என்பதும், அதில் நியாயம் உள்ளது என்பதும் அவருக்குத் தெரியும். அது மட்டுமல்ல, இந்த மக்கள் போராட்டங்கள், தமது அரசின் அதிகார மையங்களில் இருந்து, இந்த அலிபாபாக் கூட்டத்தை சற்றுத் தள்ளி வைக்க உதவியிருக்கின்றமையை சாதக அம்சமாக அவர் பார்க்கின்றார். எதிர்காலத்திலும் சில பல நல்ல முடிவுகள், தீர்மானங்களைத்தான் எடுத்துச் செயற்படுவதற்கான களச்சூழலை இத்தகைய போராட்டம் தமக்குத் தரும் என்று அவர் நம்புகின்றார். அதனால் இந்த மக்கள் எழுச்சிப் போராட்டங்கள், வன்முறையற்ற வழியில் தொடர்வதற்கு அவர் அனுமதி அளித்துப் பார்த்திருப்பார் என்பது உறுதி.**

One Man Army **ஆன ரணிலிடம் பொறுப்பைக் கொடுத்து விட்டார். ஆனாலும் தனது எம்.பிக்களில்தான் ரணில் தங்கியிருக்க வேண்டும், வேறு வழியில்லை என்பதால் ரணில் அரசின் முழ லாகனும் தன் கையில்தான் என்ற திருப்தி அவருக்கு உண்டு. அதேசமயம், எல்லா விடயங்களையும் ரணிலிடம் கொடுத்து விட்டேன், அவரிடம்தான் அரசின் முடிவுகள் என்று கையை ரணில் பக்கம் காட்டி, தமது அணியின் பெருச்சாளிகளை ஓரம் கட்டவும் ஜனாதிபதிக்கு நல்ல வாய்ப்புக் கிடைத்திருக்கின்றது. ரணிலில் கோட்டா சவாரியா, கோட்டாவில் ரணில் சவாரியா என்று கேட்டால் இங்கு இரண்டுமே நடக்கின்றது என்பதுதான் பதில்.**

# ராஜபக்ஷக்களை பாதுகாப்பதாக இடைக்கால அரசு அமையக்கூடாது!

## சம்பிக்க கோரிக்கை



நாட்டை வங்குரோத்து நிலைமைக்கு இட்டுச் சென்ற ராஜபக்ஷக்களை பாதுகாக்கும் அரசாங்கமாக இடைக்கால அரசாங்கம் அமைந்து விடக்கூடாது.

மாறாக நாட்டையும் நாட்டு மக்களையும் பாதுகாக்க கூடிய குறுகிய மற்றும் மத்திய கால தீர்வுகளை கொண்ட சர்வகட்சி அரசாகவே அது அமைய வேண்டும் என்று தெரிவித்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக ரணவக்க, அவ்வாறான அரசாங்கமொன்றை நிறுவுவதற்கு இடமளிக்கும் வகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது பதவியை துறக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

உத்தேச இடைக்கால அரசாங்கம் செயற்பட வேண்டிய முறைமை தொடர்பில் முன்வைத்துள்ள பரிந்துரைகளிலேயே சம்பிக்க ரணவக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

குறித்த பரிந்துரைகளில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு –

புதிய அரசாங்கம் ஒன்றை ஸ்தாபிக்கும் போது போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இளைஞர்களது வேண்டுகோள்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

அவ்வாறே நாடு முகம் கொடுத்துள்ள பாரதூரமான நிலையில் இருந்து விடுபடுவதற்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். நாடு முகம் கொடுத்துள்ள பாரதூரமான சிக்கல்களில் இருந்து விடுபடுவதற்கு பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

சர்வகட்சி அரசாங்கம் ராஜபக்ஷக்களைக் காப்பாற்றி அவர்களுக்கு மன்னிப்பு வழங்க தமது நேரத்தை ஒதுக்குவது என்பது காலத்தின் தேவை அல்ல.

மாறாக முக்கிய விடயங்களில் கவனம் செலுத்தி தீர்க்கமான முடிவொன்றை எட்ட வேண்டும். நாம் எதிர்கொண்டுள்ள பொருளாதார, அரசியல் பிரச்சினையில் இருந்து விடுபட முதலில் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த வேண்டும்.

இதுவரை காலம் கொள்ளையடித்து நாட்டை அழிவுக்கு உள்ளாக்கி வங்குரோத்து நிலைமைக்கு இட்டுச் சென்று ராஜபக்ஷக்களைப் பாதுகாக்கும் அரசாங்கமாக இடைக்கால அரசாங்கம் அமைந்து விடக்கூடாது.

மாறாக நாட்டையும் நாட்டு மக்களையும் பாதுகாக்க கூடிய குறுகிய மற்றும் மத்திய கால தீர்வுகளை கொண்ட சர்வகட்சி அரசாக அமைய வேண்டும்.

அவ்வாறான அரசு ஒன்றை நிறுவுவதற்கு இடமளிக்கும் வகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது பதவியைத் துறக்க வேண்டும்.

அத்தோடு அவர் விலகும் திகதி காலம் என்பன தெளிவாக அறிவிக்கப்பட வேண்டும். மேலும் உத்தேச இடைக்கால அரசாங்கம் 20 ஆவது அரசமைப்பு திருத்தத்தை உடனடியாக நீக்க வேண்டும்.

ஜனாதிபதியுடைய அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டும் என்பதோடு, சுயாதீன ஆணைக்குழுக்கள் போன்ற ஜனநாயக அரசியல் அமைப்பு முறையை நிறைவேற்ற வேண்டும்.

அரசியல் கட்சிகள் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்பட்டு அவற்றுக்கு கிடைக்கும் பொருளாதார உதவிகள், ஊடக பிரசார நேரம் போன்றன தொடர்பாகத் தெளிவாக முன்னெடுக்கப்படக் கூடியவகையில் மீண்டும் தேர்தல்கள் தொடர்பான சட்ட திட்டங்கள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும்.

மேலும் ஹொங்கொங் மற்றும் சிங்கப்பூரில் காணப்படுவது போல் ஊழல் ஒழிப்பு நிர்வாகம் ஒன்றை நிறுவ வேண்டும். இடைக்கால அரசு மக்களுக்கு விருப்பமான அரசாங்கம் ஒன்றை தெரிவு செய்து கொள்ளக் கூடிய வகையில் சுயாதீனமாக செயற்பட்டு தேர்தல்களை நடத்தக்கூடிய சுதந்திரமான ஒரு சூழலை உருவாக்க வேண்டும். அத்தோடு தேர்தல் ஆணைக்குழுவிற்கு சுதந்திரமாகச் செயற்படுவதற்கு பூரண அவகாசம் வழங்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

# ஜனநாயக உரிமை, சட்ட ஆட்சி என்பன நாட்டில் நிலவ வேண்டும்

## இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் வலியுறுத்தல்

இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும் அதன் அங்கத்துவ அமைப்புக்களும், பங்காளி அமைப்புக்களும் இணைந்து தற்போதைய அமைதியின்மை காலத்தில் அரசாங்கத்தின் எந்த மீறலும் இல்லாமல் ஜனநாயக உரிமைகள் மற்றும் சட்டத்தின் ஆட்சி நிலவ வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்றன.

இது தொடர்பாக இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு –

பிரதானமாக, பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரம், கடமையில் இருக்கும் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் நல்லாட்சிக்கான ஏனைய ஜனநாயக உரிமைகள் அனைத்தும் பாதுகாக்கப்பட்டு நிலைநிறுத்தப்பட வேண்டும்.

தற்சமயமுள்ள தனித்துவமான காலகட்டத்திலும் கூட, அரசமைப்பு ரீதியாக உத்தரவாதம் அளிக்கப்பட்ட பிரஜைகளின் பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரம், வெளியீடு, ஒன்றுகூடுவதற்கான மற்றும் ஒன்றிணைவதற்கான சுதந்திரம் உள்ளிட்ட அடிப்படை உரிமைகள் பேணப்படுவது இன்றியமையாததாகும்.

சமூக ஸ்திரத்தன்மையை உறுதி செய்வதற்காக இந்த மதிப்புக்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்று இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் வலியுறுத்துகின்றது.

இந்த முக்கியமான தருணத்தில் பொதுமக்கள் உட்பட அனைத்து தரப்பினரும் அமைதியான மற்றும் சட்டபூர்வமான முறையில் செயற்பட வேண்டும் என்றும் அனைத்து நடவடிக்கைகளும் சட்டத்தின் ஆட்சியால் நிர்வகிக்கப்படுவதை உறுதிசெய்யுமாறும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் கேட்டுக் கொள்கின்றது என அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தென்னக்கோன் மீதான தாக்கு மூவரின் விளக்கமறியல் நீடிப்பு

மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் மீதான தாக்குதல் தொடர்பில் கைது செய்யப்பட்ட 3 சந்தேகநபர்களின் விளக்கமறியல் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கோட்டை நீதிவான் நீதிமன்றம் இதற்காக உத்தரவிட்டது. கோட்டை நீதிவான் திலின கமகே இதற்கான உத்தரவைப் பிறப்பித்தார்.

குறித்த மூவரையும் அடையாள அணிவகுப்பிற்காக 19 ஆம் திகதி வரை இவ்வாறு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

அடையாள அணிவகுப்பு வியாழக்கிழமை இடம்பெற இருந்த போதும், சாட்சியாளரான பொலிஸ் சாரதி பொலிஸ் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக கொள்ளுபிட்டி பொலிஸார் அறிவித்த நிலையிலேயே இவ்வாறு வழக்கு 19 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டது.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# தற்போதைய நெருக்கடிகளை ரணிலாலேயே சீர்செய்யமுடியும்

## பிரிட்டனின் மூத்த அரசியல்வாதி நீரஜ் தேவா நம்பிக்கை

கொழும்பு, மே 14

இலங்கை தற்போது முகங்கொடுத்திருக்கும் நெருக்கடிகளைச் சிறந்த தொடர்புகளையும் அனுபவத்தையும் கொண்ட ரணில் விக்கிரமசிங்கவினால் மாத்திரமே தீர்க்கமுடியும். கடந்த முறை மைத்திரிபால சிறிசேன அவரது கைகளைக் கட்டிவிட்டார்.

எனவே இம்முறை அவருக்கு முழுமையான ஆதரவை வழங்குங்கள் என்று இலங்கையைப் பூர்வி கமாகக்கொண்ட பிரிட்டனின் மூத்த அரசியல்வாதி நீரஜ் தேவா வலியுறுத்தியுள்ளார்.

இடைக்கால அரசாங்கத்தின் புதிய பிரதமராக ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்ட நிலையில், தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவிலேயே நீரஜ் தேவா மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

அவர் அப்பதிவில் மேலும் கூறியிருப்பவை வருமாறு –

ஜனநாயக விரோத சக்திகள் இராணுவச்சட்டத்தைக் கொண்டுவருவதற்கு முற்படக்கூடும் என்பதால் இலங்கையில் இடம்பெறும் போராட்டங்கள் வன்முறைகளின்றி அமைதியான முறையில் முன்னெடுக்கப்படவேண்டும்.

தயவுசெய்து வன்முறைகளை முடிவிற்குக் கொண்டு வாருங்கள். இலங்கை பெருமைமிக்க வரலாற்றைக் கொண்ட, அமைதி நிலவும் பாரம்பரிய பௌத்த நாடாகும். இவ்வாறானதொரு பின்னணியில் சிறந்த தொடர்புகளையும் அனுபவத்தையும் கொண்ட ஒரேயொரு தலைவரால் மாத்திரமே இந்த நெருக்கடியைச் சீர்செய்ய முடியும். ரணில் விக்கிரமசிங்கவால் இந்தப் பணியை சீராகச்செய்யமுடியும் என்று நான் அறிவேன். அவர் என்னுடைய நண்பராக இருந்தாலும், இங்கு அது அவசியமில்லை.

கடந்த முறை மைத்திரிபால சிறிசேன அவரது கைகளைக் கட்டிவிட்டார். இம்முறை அவருக்கு முழுமையாக ஆதரவை வழங்குங்கள் என்று அவர் அந்தப் பதிவில் வலியுறுத்தியுள்ளார்.

# பாதுகாப்புத்தரப்பினருக்கு மிதமிஞ்சிய அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளமைக்கு ஐ.நா. கடும் கண்டனம்

பொலிஸார் மற்றும் இராணுவத்தினருக்கு வழங்கப்பட்டுள்ள அவசரகால அதிகாரங்கள், மிதமிஞ்சிய படையினரின் பயன்பாடு, தன்னிச்சையான கைதுகள் உள்ளடங்கலாக ஆர்ப்பாட்டங்கள் முடக்கப்பட்டுள்ளமையைக் கடுமையாகக் கண்டிப்பதாக ஒன்றுகூடுதலுக்கான சுதந்திரம் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் விசேட அறிக்கையாளர் கிளெமன்ற் வொயூல் தெரிவித்துள்ளார்.

தற்போது நாடு பாரிய பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிக்கு முகங்கொடுத்திருப்பதுடன், கடந்த சில தினங்களாக நாடளாவிய ரீதியில் வன்முறைச்சம்பவங்களும் பதிவாகியிருந்தன.

இது தொடர்பாக தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவிலேயே ஐ.நாவின் விசேட அறிக்கையாளர் மேற்கண்டவாறு கண்டனம் வெளியிட்டுள்ளார். அவரது பதிவில் மேலும் கூறப்பட்டிருப்பவை வருமாறு –

பொலிஸார் மற்றும் இராணுவத்தினருக்கு வழங்கப்பட்டுள்ள அவசரகால அதிகாரங்கள், மிதமிஞ்சிய படையினரின் பயன்பாடு, தன்னிச்சையான கைதுகள் உள்ளடங்கலாக ஆர்ப்பாட்டங்கள் முடக்கப்பட்டுள்ளமையை நான் கடுமையாகக் கண்டிக்கின்றேன்.

அதிகாரிகள் ஆர்ப்பாட்டக்காரர்கள்மீது அடக்குமுறைகளைப் பிரயோகிப்பதை நிறுத்திக் கொள்வதுடன், அவர்களது உரிமைகளுக்கு மதிப்பளித்துப் பாதுகாக்க வேண்டும். மாறாக அவர்களை அமைதிப்படுத்துவது முறையான பதிலாக இருக்காது என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை நாட்டின் தற்போதைய நிலைவரம் தொடர்பில் தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றைச் செய்திருக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான நிரந்தர வதிவிடப்பிரதிநிதி ஹனா சிங்கர், பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார் –

நாடளாவிய ரீதியில் சிறுவர் பாதுகாப்புக் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கும் அத்தியாவசிய சேவைகள் எவ்வித இடையூறுமின்றித் தொடர்ந்து இயங்குவதை உறுதிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு நாம் அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம். அதேவேளை தற்போது சிறுவர்கள் அன்றாடம் முகங்கொடுத்திருக்கும் நெருக்கடிகளைச் சமாளிப்பதற்கு உதவுவது பெற்றோர்கள், பாதுகாவலர்கள் மற்றும் ஒட்டுமொத்த சமூகத்தினரினதும் கடமையாகும். – என்று வலியுறுத்தியுள்ளார்.

# கோரிக்கையை நிறைவேற்றினால் போராட்டத்தை நாம் நிறுத்தலாம்

## கலாநிதி ஓமல்பே சோபித தேரர் தெரிவிப்பு

போராட்டக்காரர்கள் கோரும் அரசியல் மறுசீரமைப்பை மேற்கொண்டால் மாத்திரமே மக்களின் அமைதியான போராட்டத்தை நிறுத்த கூடியதாக இருக்கும் என கலாநிதி ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களிடம் நேற்று முன்தினம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

காலிமுகத் திடலில் நடக்கும் அமைதியான போராட்டத்தை நிறுத்த வேண்டுமாயின் தற்போது ஏற்பட்டுள்ள வாழ்க்கை தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டும்.

நிலையான அரசியல் சூழலை உருவாக்கி, மக்கள் தமது வாழ்க்கையை கொண்டு நடத்தத் தேவையான அடிப்படைகளை வழங்க வேண்டும் எனவும் சோபித தேரர் கூறியுள்ளார்.

# மக்களின் தீர்மானத்தை புறந்தள்ளி அரசியல் முடிவுகளை எட்டியுள்ள ஜனாதிபதி

## அநுர காட்டம்

ஜனாதிபதி மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் மக்களின் தீர்மானத்தை புறந்தள்ளி அரசியல் முடிவுகளை எட்டியுள்ளனர் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸா நாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ரணில் நியமிக்கப்படும் விடயம் ஏற்றுக் கொள்ள முடியாத விடயமாகும் என ஓமல்பே சோபித தேரர் குறிப்பிட்டுள்ளார்.

ஓமல்பே சோபித தேரர், கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை உள்ளிட்ட சமயத்தலைவர்கள் இவ்வாறு எதிர்ப்பைத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வன்முறைக் குழுக்கள் தொடர்பான தகவல்கள் வழங்க விசேட தொலைபேசி இலக்கங்கள்!

சட்டவிரோதமான மற்றும் வன்முறை குழுக்கள் தொடர்பான தகவல்களை வழங்குவதற்கான விசேட தொலைபேசி இலக்கங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

பாதுகாப்பு அமைச்சால் இது தொடர்பாக தொலைபேசி இலக்கங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

தொலைபேசி இலக்கங்கள்:- 0767 393977- 0112 441146

### போராட்டத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இன, மத பேதமின்றி அரசாங்கத்துக்கு எதிரான போராட்டம் காலி முகத்திடலில் நீண்ட நாள்களாக இடம்பெற்று வந்தது.

கடந்த திங்கட்கிழமை குறித்த ஜனநாயகப் போராட்டத்தின் மீது விரோத சக்திகளின் செயற்பாட்டின் மூலம் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது..

எனது 70 வருட அரசியல் வாழ்க்கையில் பல போராட்டங்களைப் பார்த்துள்ளேன். பல போராட்டங்களில் பங்குபற்றியுள்ளேன்.

ஆனால் இலங்கையில் இடம்பெற்ற பாரிய போராட்டங்களில் இன, மத பேதமின்றி அனைவரும் ஒன்றிணைந்து நடத்தும் போராட்டம் தற்போதைய காலிமுகத்திடல் போராட்டத்தைப் பார்க்கிறேன்.

ரணில் விக்கிரமசிங்க என்னுடைய நண்பராக இருந்தாலும் அவர் தற்போது பிரதமராக பதவியேற்றுக் கொண்டமை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது.

ரணில் விக்கிரமசிங்க பிரதமராகியபோது ஆட்சியை அப்போதைய சந்திரிகா அம்மையார் கலைத்தார்.

அதேபோல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 22 ஆசனங்களை நாடாளுமன்றத்தில் பெற்ற போது என்னைத் திட்டமிட்டுத் தோற்கடித்தார்கள். இவை இரண்டைப் பற்றியும் நான் இப்போது கதைக்க விரும்பவில்லை

இளைஞர்கள் ஒன்றுகூடி ஜனாதிபதியை வெளியேறுமாறும் நாடாளுமன்றத்தைக் கலைத்துப் புதிய தேர்தலை நடத்த வேண்டும் எனப் போராட்டம் நடத்தும் நிலையில் மக்களால் தெரிவு செய்யப்படாத ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவி ஏற்றமையை ஏற்றுக் கொள்ள முடியாது. – என அவர் மேலும் தெரிவித்தார்.

# கொள்கைகளுக்கிடையில் வேறுபாடு பஸிலுக்கும் ரணிலுக்கும் கிடையாது !

## விமல் வீரவன்ஸ சாடல்

முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் கொள்கைக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கைக்கும் இடையில் பெரிதளவிலான வேறுபாடு கிடையாதென நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

இதேவேளை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளை ஏற்கப்போவதில்லை என்றும் நாட்டுக்குப் பயனுடைய தீர்மானங்களுக்கு எதிர்க்கட்சியில் இருந்தும் கொண்டு ஆதரவு வழங்குவோம் என்றும் அரசாங்கத்தில் இருந்து விலகிய 10 கட்சிகளும், தொடர்ந்தும் நாடாளுமன்றில் சுயாதீன அணியாகச் செயற்பட தீர்மானித்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே விமல் வீரவன்ஸ இதனைத் தெரிவித்தார்.

**‘கம்பவாரிதி’ இலங்கை ஜெயராஜ் தமது ‘உகரம்’ இணையத்தளத்தில் ‘பாட்டும் நானே! பாவமும் நானே!’ என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி - பதில் பகுதி ‘காலைக்கதிர்’ நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்குத் தீனியாகிறது.**

# பாட்டும் நானே? பாவமும் நானே!




**1. கேள்வி:-** இந்தியத் தொலைக்காட்சித் தொடர்களில் நடித்துவரும் நடிகர்களைக் கொண்டு, விதம் விதமான கலை நிகழ்ச்சிகளை நடத்துவித்து, அதனை எல்லா ‘ரி.வி. சனல்களும்’ வெளியிட்டு வருகின்றனவே. அந்நிகழ்ச்சிகள் பற்றி உங்கள் கருத்து என்ன?

**பதில்:-** சினிமா நடிகர்களுக்குச் சமமாகத் தொலைக்காட்சித் தொடர் நடிகர்களுக்கும் இப்போது ‘மவுசு’ ஏற்பட்டிருப்பதையே இந்த முயற்சிகள் எடுத்துக் காட்டுகின்றன. சினிமா நடிகர்களை அவ்வப்போது வெளிவரும் படங்களில்தான், மக்கள் தாமாகச் சென்று காண்கிறார்கள். ஆனால் தொலைக்காட்சித் தொடர் நடிகர்களோ தினம் தினம் வீடுகளுக்கே வந்து மக்கள் தொடர்பை ஏற்படுத்திக் கொள்கிறார்கள். அதனால் வெற்றி பெறும் நாடகத் தொடர்களின் நடிகர்கள் மக்கள் மனதில் ஆழப் பதிந்து விடுவது மறுக்கமுடியாத உண்மை. அவர்களை வைத்துப் பணம் ‘.கட்டும்’ முயற்சியாகத்தான் இத்தகு நிகழ்ச்சிகளை எல்லா ‘ரி.வி. சனல்களும்’ நடத்துகின்றன.

இதனால் நன்மையும் உண்டு. தீமையும் உண்டு. தமக்குப் பிடித்த நடிக, நடிகையர்களை இயல்பான நிலையில் இந்நிகழ்ச்சிகளில் காணக்கிடைப்பதால், மக்களுக்கு மகிழ்வு ஏற்படுவதே, விளையும் நன்மை எனலாம்.

நாடகத் தொடர்களில் வரும் குறித்த பாத்திரங்களில் பொருந்தி மக்கள் மனதில் ஆழமான பதிவினை ஏற்படுத்திக் கொள்ளும் நடிகர்கள், மேடையில் வந்து கூத்தாடுவதால் அந்த நாடகப் பாத்திர ‘இமேஜ்’ பார்ப்போர் மனதில் சிதைந்து போகிறது. அதனால் நாடகத்தின் கூர்மைக்குப் பாதிப்பு ஏற்படுகிறது. குறித்த ஒரு நாடகம் நடந்து கொண்டிருக்கும் போதே, அதில் நடிப்போரின் இயல்பு நிலையைக் காட்டுவது நாடகத்தில் அப் பாத்திரத்தின் வீரியத்தை நிச்சயம் குறைக்கும் என்றே கருதுகிறேன். இதுதான் அந்நிகழ்ச்சிகளால் ஏற்படும் தீமை எனலாம்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * ஓகோண்டானாம்! வாரிதியார் இதுகள் எல்லாம் கூடப் பார்க்கிறாரோ! உருப்பட்ட மாதிரித்தான்.**

**2. கேள்வி:-** தமிழ்நாடு பி.ஜே.பி தலைவர் அண்ணாமலை உங்களை வந்து சந்தித்தாராமே? தலைவர்களெல்லாம் தேடி வந்து சந்திக்க நீங்கள் என்ன அரசியல் தலைவரா? அல்லது மதத்தலைவரா?

**பதில்:-** இரண்டும் இல்லை. நான் மிகச்சாதாரண ஓர் இலக்கியவாதி. (அப்படிச் சொல்வது சரியா என்று கூடத் தெரியவில்லை.) இலக்கியம் படித்ததால் அனைவரையும் நேசிக்க முடிகிறது. அதனால் இனப்பற்று, தேசப்பற்று, அறப்பற்று என்பவையெல்லாம் தானாக வந்துவிடுகின்றன. அப்படி ஏற்படும் உணர்ச்சிகளை வெளிப்படுத்தித்தான், ‘பாட்டும் நானே பாவமும் நானே’ எனும் இக்கேள்வி பதில் பகுதியில் உங்களது சமூகம் சார்ந்த கேள்விகளுக்குப் பதில் எழுதி வருகிறேன். திரு. அண்ணாமலை பற்றியும் அவரால் ஏற்பட்ட, அவரது கட்சி வளர்ச்சி பற்றியும் நான் எழுதியதை நண்பர்கள் அவருக்குக்காட்ட அதைப் படித்து மகிழ்ந்ததனால்தான் தனது அவசரமான நிகழ்ச்சி நிரலில் என்னைக் காணவும் நேரம் ஒதுக்கி அவர் வந்தார். பெரியவர்களிடம் காட்டும் மரியாதை, தன்னடக்கம், மற்றவர்கள் பேசும் போது கூர்ந்து கவனித்து நல்லவற்றை உள்வாங்கும் தன்மை, தன் தகுதிவிட்டு இறங்கி அன்பால் அனைவரையும் அணைத்துக் கொள்ளும் இயல்பு, பொய் இல்லாமல் மனந்திறந்து பேசும் நற்பண்பு என, ஒரு நல்ல தலைவருக்குரிய பல பண்புகளை அவரிடம் காண முடிந்தது. நண்பர்கள் பலரோடு வந்ததால் அவரோடு நான் பேச நினைத்திருந்த விடயங்கள் சிலவற்றைப் பேசமுடியாமல் போயிற்று. விரைவில் மீண்டும் சந்திப்பதாய்ச் சொல்லியிருக்கிறார். அப்போது அவற்றைப் பேசலாம் என்றிருக்கிறேன்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * ‘ரெக்கை கட்டிப் பறக்குதம்மா அண்ணாமலை சைக்கிள்...’ ஹி..ஹி..**

**3. கேள்வி:-** இளைஞர்களின் எழுச்சியை வன்முறையால் அடக்க நினைத்த பழைய பிரதமரின் செயல் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:-** காலம் பிழைத்தால் கண்ணை மறைக்கும் என்பது இதைத்தான் போல. போதிய பாதுகாப்பின்றி குளவிக் கூட்டின் மேல் கல் எறிந்து, தானும் கொட்டப்பட்டுத் தன்னைச் சார்ந்தவர்களையும் கொட்டப்பட வைத்திருக்கிறார். முட்டாள்த்தனத்தின் எல்லை இது. ஊரெல்லாம் கொந்தளித்துக் கிடந்ததை ஒரு குழந்தை கூட அறியும். அலரி மாளிகையோடு சேர்ந்து தமது கண்களையும் காதுகளையும் கூட அடைத்துவிட்டார்கள் போல. இன்று பதவியை விட்டு இறங்கிய காரியத்தை அன்றே செய்திருந்தால் தானும் தப்பி தன்னைச் சார்ந்தவர்களையும் தப்ப வைத்திருக்கலாம். விதி விடவா போகிறது?

**உலகநாதரின் ஒப்பீனியன் * ‘வெஞ்சின விதியை வெல்ல வல்லமோ’ - கம்பர் வாழ்க! ஹி.. ஹி..**

**4. கேள்வி:-** 2009 மே இல் நடந்த சம்பவங்களுக்கு 2022 இல் பலன் கிடைத்திருப்பது பற்றி எல்லோரும் பேசுகிறார்கள். அதுபற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:-** மே இல் நடந்ததற்குப் பதிலாக மே இல் நடந்திருப்பது தற்செயல்தான். ஆனால் தர்மம் இவ்வளவு சீக்கிரம் வெல்லும் என்று யாரும் நினைத்திருக்க மாட்டார்கள் என்பது மட்டும் உண்மை. வெற்றி தந்த ஆணவத்தில் பிழையான வழியில் நடந்து, பிழையான செயல்களைச் செய்து, பிழையான முடிவுகளை எடுத்துப் பிழையாகிப் போயிருக்கிறார்கள். இதனைச் செய்தது காலமோ, கடவுளோ யாரறிவார்? முன்பெல்லாம் ஓர் அலுவலகத்தில் ஒரு ‘பைல்’ நகர பல நாள்கள் செல்லும். அலுவலகங்களைக் ‘கணனி’ மயப்படுத்திய பிறகு இப்போது பல நாள் எடுத்த அக்காரியங்களைச் சில நாள்களிலேயே முடிக்க முடிகிறது. கடவுளும் தர் மக்கணக்கைத் தீர்க்கும் தனது அலுவலகத்தைக் ‘கணனி’ மயப்படுத்திவிட்டாரோ? என்று எண்ணத் தோன்றுகிறது.

**உலகநாதரின் ஒப்பீனியன் * கடவுளும் கணனியும் சூப்பர்.**

**5. கேள்வி:-** ஆவேசம் அடைந்த மக்கள் அநியாயக்காரர்களின் சொத்துக்களையெல்லாம் அழித்தும், எரித்தும் நாசம் செய்ததில் உங்களுக்கும் மகிழ்ச்சி தானே?

**பதில்:-** ஒருநாளும் இல்லை! பிழை செய்தவர்கள் தண்டிக்கப்படவேண்டும் என்பதில் எனக்கு கருத்து மாறுபாடில்லை. ஆனால் அந்தத் தண்டனை சட்டத்தால் அல்லது இயற்கையால் வழங்கப்பட வேண்டும். ஆவேசப்பட்டு சில குழுக்கள் சட்டத்தைத் தம் கையில் எடுத்துக் கொள்வது ஒருநாளும் சரியாகாது. இப்போது தண்டிக்கப்படுகிறவர்கள் நம்முடைய வெறுப்புக்கு ஆளானவர்கள் என்பதால், பலரும் நடக்கும் இச்செயல்களால் மகிழ நினைக்கிறார்கள். அவர்களுக்கு நான் ஒன்றைச் சொல்வேன். இதே போன்ற சில குழுக்கள் தான் முன்பு நடந்து முடிந்த இனக்கலவரங்களின் போது, நம் இன மக்களின் உயிரையும் சொத்துக்களையும் சூறையாடித் தள்ளின. அப்போது மனதில் ஏற்பட்ட காயமும் அதனால் ஏற்பட்ட வடுவும் இன்னும் எனக்குள் அழியாமல் இருக்கின்றன. அதனால் எவரேனும் எதற்காகவேனும் கட்டுப்பாடுகளைக் கடந்து அழிவு செய்கிற பொழுது வெறுப்பும் கோபமும் தான் வருகிறது.

மற்றொன்று! பிழை செய்த தலைவர்களையும் அவர்களைச் சார்ந்தவர்களையும் கொடுமையாகத் தண்டித்துச் சூறையாடியது சரியென்றால், அப்படித் தண்டிக்கப்படவேண்டியவர்கள் வரிசையில் இன்னும் சிலபேரைச் சேர்க்கவேண்டியிருக்கிறது. அவர்கள் யார் என்கிறீர்களா? கொடிய இனவாதக் கருத்துக்களுக்கு ஆட்பட்டு, இத்தகைய தலைவர்களுக்கு வாக்களித்து, ஊக்கப்படுத்தி அவர்களை அரசில் அமர்த்திய அத்தனை மக்களையும்கூட, தண்டிக்கப்பட வேண்டியோர் வரிசையில் சேர்க்க வேண்டுமல்லவா? அத்தனை பேர் வீடுகளையும் எரிக்க வேண்டும் என்றால் இந்த நாட்டில் சாம்பல்தான் மிஞ்சும் என்று நினைக்கிறேன்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * வாரிதியாரின் அறம் சார்ந்த பதில் இது. உலகநாதரும் இதனை ஒத்துக் கொள்கிறார்.**

**6. கேள்வி:-** புதிய பிரதமராக ரணிலைத் தேர்ந்தெடுத்தது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:-** பிழையான அரசியல் பாதையில் தொடர்ந்து முன்னேறுவது என்று ஜனாதிபதி நினைக்கிறார் போல. அல்லது அறந்தான் அவரைப் பிடர்பிடித்து உந்துகிறதோ? யாரறிவார்? ரணிலின் தேர்வு பற்றிச் சுருக்கமாய்ச் சொல்வதானால், ‘புதிய மொந்தையில் ஊற்றப்பட்ட பழைய கள்ளு’ என்றுதான் சொல்லவேண்டும். அவருடைய ஆற்றல், அனுபவம் என்பதெல்லாம் ஒருபக்கம் கிடக்க, ஒரு ஜனநாயக நாட்டின் அரசைப் பொறுப்பேற்கும் சில அடிப்படைத் தகுதிகளும் கூட அவரிடம் இல்லை என்பது வருத்தத்திற்குரிய உண்மையாகும். தேர்தலில் தாம் தலைமை வகித்த கட்சிக்கு ஒரு ‘சீற்றைத்’ தானும் வாங்க முடியாமல் போன தலைவர் அவர். தன் தொகுதியில் கூட வெற்றிபெற முடியாமல் தோற்றுப் போனவர். பலதரம் தன் கைக்கு வந்த பிரதமர் பதவியை வைத்துத் தனது கூர்மையான புத்தியால் ‘குள்ளத்’ தனங்கள் செய்ததன்றி வேறெதையும் சாதிக்காதவர். அவருக்கு, பிரதமர் பதவியை ஜனாதிபதி வழங்கியதென்பது பரிசளிப்பா? அல்லது பழிதீர்ப்பா? என்று தெரியவில்லை. பெரும்பாலும் அவர் பதவி ஒருசில நாள்களுக்குத்தான் என்று நினைக்கிறேன்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * எத்தனை தரம் பதவி கிடைத்தாலும் அதனை முழுமையாய் அனுபவிக்கும் ராசி இல்லாத மனுஷர் இவர்.**

**7. கேள்வி:-** (முன்னாள்)பிரதமருக்கும் அவரைச் சார்ந்தோருக்கும் விழுகின்ற அடி அவர்களின் பாவத்திற்கான தண்டனை என்று நம் தலைவர்களில் சிலர் கொண்டாடுகிறார்களே?

**பதில்:-** தாமாக ஒரு சிறு கல்லைக்கூட எறியாமல், தானாய் விழுகிற பழங்களுக்கு உரிமை கொண்டாடுவதில் நம்மவர்கள் சமத்தர்கள். நமக்கு இழைத்த பாவத்திற்குத்தான் இந்த அடி என்று கொண்டாட வேண்டுமென்றால், இந்த அடியை வாங்கிக் கொடுத்ததில் இவர்களது பங்களிப்பு எள்ளளவாவது இருக்கவேண்டும் அல்லவா? நம் இனத்திற்கு ஏற்பட்ட பாதிப்பிற்கு பழிவாங்கவென இதுவரை தாமாக எதுவும் செய்யாமல், அப்பாதிப்புகளை வைத்து அரசியல் நடத்திப் பதவிச்சுகம் அனுபவிக்கும் இவர்களுக்கு, இன்றைய அரசினரின் வீழ்ச்சியைக் கொண்டாடும் உரிமை இல்லை என்றே நினைக்கிறேன். அவர்கள் செய்த பாவத்திற்குத்தான் இந்த அடி என்றால், நமக்கு விழுந்த இதைவிட மோசமான அடிக்கு நாம் செய்த பாவம் என்ன? எனும் கேள்வி நாக்கு நுனிவரை வருகிறது. எனக்கேன் வீண் வம்பு. விட்டுத்தள்ளுங்கள்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * இந்த மனுஷன் எந்தக் கட்சி என்று கண்டுபிடிக்கவே முடியுதில்லை.**

**8. கேள்வி:-** கொல்லும் கூட்டம் சூழ்ந்திருக்க அலரி மாளிகைக்குள் ஒளிந்திருந்துவிட்டு பாதுகாப்புத் தேடி திருகோணமலையில் குடும்பத்துடன் ஒளிந்திருக்கும் ‘மஹிந்த’ குடும்பத்தாரின் இன்றைய நிலை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:-** கடவுள் அவர்களுக்கு நன்மைதான் செய்திருக்கிறார்! உயிர் அச்சம் என்றால் என்ன? உடமை இழப்பு என்றால் என்ன? உற்றாரின் பாதிப்பு என்றால் என்ன? அகதி வாழ்க்கை என்றால் என்ன? என்பவற்றையெல்லாம் இவ்வளவு அழகாகச் ’செயல்முறை’ வகுப்பெடுத்து உணர்த்தியிருக்கிறார் அவர். உண்மைகளை, தீயவர்களுக்கும் இறைவன் உணர்த்தத்தான் செய்கிறான். அவர்கள்தான் அதனை உணர்வதில்லை.

(08ஆம் பக்கம் பார்க்க)

# மஹிந்தவுக்கு ஏற்பட்ட கதியே ரணிலுக்கும்

# 'கோட்டா கோ கம' ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிக்கைகளை முன்வைத்து எச்சரிக்கை!

காலி முகத்திடல் 'கோட்டா கோ கம ஆர்ப்பாட்டக்காரர்கள் முதன் முறையாக தங்களின் கோரிக்கைகளை பகிரங்கப்படுத்தியுள்ளனர்.

காலி முகத்திடல் தாய்நாடு பிரஜைகளின் வலியுறுத்தல் யோசனை என சமூக நீதிக்கான இளைஞர் அமைப்பு குறித்த கோரிக்கைக்கு பெயரிட்டுள்ளனர்.

பல்வேறு காரணிகளை அடிப்படையாகக்கொண்டு ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவியேற்றுள்ளார்.

இவரது அரசியல் வரலாற்றை நன்கு அறிவோம். முன்வைத்துள்ள கோரிக்கைகளை விரைவாக செயற்படுத்த வேண்டும். அதனை விடுத்து கடந்த காலங்களில் செயற்பட்டதைப் போன்று செயற்பட்டால் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஏற்பட்ட கதியே ஏற்படும் எனவும் குறிப்பிட்டனர்.

காலி முகத்திடல் 'கோட்டா கோ கம' போராட்டக்களத்தில் ஊடகசந்திப்பை நடத்தி தங்களின் கோரிக்கைகளைப் பகிரங்கப்படுத்தினர்.

குறித்த கோரிக்கையில் பல பிரதான விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உடனடியாக பதவி விலக வேண்டும் என்பது குறித்த கோரிக்கையில் பிரதானமாக உள்ளது.

வரையறுக்கப்பட்ட காலத்துக்கு இடைக்கால அரசாங்கத்தை ஸ்தாபித்தலுடன் அமைச்சரவையின் எண்ணிக்கையை குறைந்தப்பட்சம் 15 ஆக மட்டுப்படுத்தல் மற்றும் மக்கள் பிரதிநிதிகளுக்கு வழங்கப்படும் வரப்பிரசாதங்களை மீளாய்வு செய்தல் இரண்டாவது கோரிக்கையாகும்.

அரசமைப்பில் தேவையான திருத்தங்களை விரைவாக முன்னெடுத்தல், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை முழுமையாக இரத்து செய்து அரசமைப்பின் 21 ஆவது திருத்தத்தை இரண்டு மாத காலத்துக்குள் அமுல்படுத்தல், 06 மாத காலத்துக்குள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இரத்து செய்தல் முக்கியமானதாகும்.

பொருளாதார நெருக்கடியை விரைவாக முகாமைத்துவம் செய்தல், சொத்து விசாரணை மற்றும் வெளிப்படுத்தல், ராஜபக்ஷர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளினதும், அவர்களின் உறவினர்களின் சொத்து விவரங்கள் பகிரங்கப்படுத்தல், வெளிநாடுகளில் உள்ள சொத்துக்கள் தொடர்பான விவரங்களைப் பகிரங்கப்படுத்தல்,

சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்தல், வாழும் உரிமையை அடிப்படை உரிமையாக அரசமைப்பிற்குள் உள்ளடக்குதல் மற்றும் இடைக்கால அரசாங்கத்தை தொடர்ந்து இடம்பெறும் சகல தேர்தல்களும் சுதந்திரமாகவும், நீதியானதாகவும் நடத்தும் சட்ட திருத்தங்களை மேற்கொள்ளல் அவசியமாகும்.

## தேசபந்து தென்னகோன் வியாழன் மனித உரிமை ஆணைக்குழுவில்!



கொழும்பு, மே 14

கோட்டாகோகம தாக்குதல் சம்பங்கள் தொடர்பில் மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் நேற்று முன்தினம் (வியாழக்கிழமை) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அழைக்கப்பட்டுள்ளார்.

ஏற்கனவே பொலிஸ் மா அதிபர் மற்றும் இராணுவத் தளபதி ஆகியோர் அண்மையில் ஆணைக்குழுவில் முன்னிலையானபோது, அவர்களிடம் இருந்து பெறப்பட்ட தகவலின் அடிப்படையில் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன், அழைக்கப்பட்டுள்ளார் என, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவி ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி ரோஹினி மாரசிங்க தெரிவித்தார்.

## முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வாரத்தின் 2 ஆவது நாளில் புதுக்குடியிருப்பில் கஞ்சி





முல்லைத்தீவு, மே 14

'கஞ்சி பரிமாறுவோம் முள்ளிவாய்க்கால் வலி சுமந்த கதை பகிர்வோம்' என்ற தொனிப்பொருளில் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வாரத்தின் மே 12 தொடக்கம் மே 18 வரை முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறும் வேலைத்திட்டம் முல்லைத்தீவு மாவட்டத்திலும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அதன் இரண்டாவது நாளில் வடக்கு கிழக்கு வலிந்து காணமால் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்தின் ஏற்பாட்டிலும் பொது அமைப்புகளும் இணைந்து முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கு செயற்பாடு நேற்று (வெள்ளிக்கிழமை) முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் முன்னெடுக்கப்பட்டது.

மே 12 - மே 18 வரை தமிழினப்படுகொலை வாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் 2009 முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை யுத்தத்தில் தமிழ் மக்கள் உணவாக உட்கொண்ட உப்பு கஞ்சியை இந்த வாரத்தில் அனைத்து மக்களுக்கும் வழங்கி முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் கதையை கடத்துவதோடு இனப்படுகொலைக்கு நீதி கோரும் அங்கமாக இந்த கஞ்சி பரிமாறும் வேலைத்திட்டம் வடக்கு கிழக்கு மாகாணம் எங்கிலும் வியாழக்கிழமை முதல் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

புலனாய்வாளர்களின் கெடுபிடிகளுக்கு மத்தியில் புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் கஞ்சி வழங்கு செயற்பாட்டை காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மற்றும் பொது அமைப்பினர் இணைந்து நேற்று முன்னெடுத்தனர்.

கஞ்சி ஆக்கும் செயற்பாட்டை ஆரம்பிக்க குறித்த பகுதிக்கு ஏற்பாட்டாளர்கள் வருகை தந்த நிலையில் புலனாய்வாளர்கள் வருகை தந்து படம் எடுத்து கண்காணிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்தனர்

## பொருள்களின் விலையை குறைப்பதற்கு ஏற்பாடுகள்

புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையின் கீழ் பொருள்களின் விலைகளைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே ஆரம்பித்துள்ளார்.

சீனா, ரஷ்யா, ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகளின் இராஜதந்திரப் பிரதிநிதிகளுடன் கடந்த சில நாள்களாக பிரதமர் கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது கடனாக இன்றி இலங்கைக்கு வழங்கக்கூடிய உதவிகள் தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதேவேளை எரிபொருள் மற்றும் எரிவாயு பற்றாக்குறை தொடர்பிலும் புதிய பிரதமர் கலந்துரையாடியுள்ளார்.

அதற்கமைய விரைவில் பொருள்களின் விலைகளில் மாற்றம் ஒன்றை காண முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பொலிஸாரின் வீடுகளுக்கு சேதம் விளைவிக்குமாறு சமூக ஊடகங்களில் பதிவிட்டவர் நிட்டம்புவவில் கைது!

### அவர் முன்னாள் இராணுவ லெப்டினன்ட்

ஆயுதப்படை அதிகாரிகள் மற்றும் பொலிஸாரின் வீடுகளுக்கு சேதம் விளைவிக்குமாறு சமூக ஊடகங்களில் பதிவேற்றம் செய்து பொதுமக்களைத் தூண்டிவிட்ட குற்றச்சாட்டின் பேரில் இலங்கை இராணுவத்தின் முன்னாள் லெப்டினன்ட் ஒருவரை நிட்டம்புவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

உயர் இராணுவ மற்றும் பொலிஸ் அதிகாரிகளின் வீடுகளுக்கு சேதம் விளைவிப்பதில் கவனம் செலுத்துவதற்காக, அண்மைய குழப்பத்தின் போது வன்முறையில் ஈடுபட்ட மற்றும் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த குழுக்களை அழைத்து சந்தேக நபர் தனது முகநூல் கணக்கில் பதிவிட்டார் எனவும் இராணுவம் தெரிவித்துள்ளது.

சந்தேகநபர் நிட்டம்புவ பொலிஸில் சரணடைந்ததன் பின்னர் கைது செய்யப்பட்டுள்ளமையுடன், அவர் அத்தனகல்லை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

லெப்டினன்டாக கடமையாற்றியபோது முறைகேடான நடத்தை காரணமாக குறித்த சந்தேக நபர் 2020 ஜனவரி 29ஆம் திகதி இராணுவத்தில் இருந்து பணி நீக்கம் செய்யப்பட்டார் என இராணுவம் தெரிவித்துள்ளது.

## பாட்டும் நானே?...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் திருந்திவிட்டால் அவர்களுக்கும் இறைவன் மன்னிப்பு அளிப்பான் என்பதே உண்மை. இரணியனுக்குப் பிரகலாதன் மூலமும், சூரபத்மனுக்குச் சிங்கமுகன் மூலமும், இராவணனுக்கு விபீடணன் மூலமும் இப்படித்தான் இறைவன் உண்மையை உணர்த்த முயன்றான். ஆனால் ஆணவத்தால் ஆட்கொள்ளப்பட்ட அவர்களோ அந்த உண்மையை உணரத்தவறி மீண்டும் மீண்டும் பிழை செய்து அழிந்தார்கள். இன்றைய ஆட்சியாளர்கள் என்ன செய்யப்போகிறார்கள் என்று பார்ப்போம்?

**உலகநாதரின் ஒப்பீனியன் * பிரதமர் நியமனத் திலேயே இவர்களின் வருங்காலப் போக்குத் தெரிகிறதே! இதுக்கு மேல என்னத்தைப் பார்க்கிறதாம்?**

**9. கேள்வி:-** புதிய பிரதமருக்குப் பழைய பிரதமர் வாழ்த்துச் சொல்லியிருக்கிறாராமே? அவ்வளவு சந்தோஷமா அவருக்கு?

**பதில்:-** இருக்காதா பின்னே? தனக்குப் பதிலாய் அடிவாங்க இன்னொருவர் வந்துவிட்டார் என்றால் யார்தான் சந்தோஷப்படமாட்டார்கள்?

**உலகநாதரின் ஒப்பீனியன் * எனக்கு மூக்கறுந்தாலும் பறவாயில்லை, எதிரிக்குச் சகுனப் பிழை வந்தால் சரி என்ற கதைதான் போல.**

# பொருளாதார பின்னடைவுக்கு மூல காரணமான இனப்பிரச்சினை குறித்து யாரும் சிந்திக்கவில்லை!

## கோவிந்தன் கருணாகரம் சுட்டிக்காட்டு



நாட்டின் பொருளாதாரப் பின்னடைவுக்கு முக்கிய காரணமாகவுள்ள இனப்பிரச்சினை தொடர்பில் யாரும் சிந்திக்கும் நிலையில் இல்லையெனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் உள்ள அவரது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் இதன்போது மேலும் தெரிவிக்கையில் –

'கோட்டா கோ கோம்' போராட்டத்தை வழிநடத்துகின்றவர்களோ, புதிய அரசாங்கத்தை அமைக்கவுள்ளவர்களோ, ஒன்றிணைந்த பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகளோ பல்வேறு கோரிக்கைகளை முன்வைக்கின்ற போதிலும் இந்த நாட்டின் பொருளாதார பின்னடைவுக்கு முக்கிய காரணமாகவுள்ள இனப்பிரச்சினை தொடர்பில் யாரும் சிந்திக்கும் நிலையில் இல்லை.

2018 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட அரசியல் சூழ்ச்சியிலிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சட்டத்தரணிகள் இதே ரணிலைப் பாதுகாத்தார்கள். மீண்டும் அவ்வாறான நிலைக்குச் செல்வார்கள் என்று கருதவில்லை.

தமிழ் தலைமைகள் பல தடவைகள் சூடு கண்டும் மீண்டும் மீண்டும் அடுப்பங்கரைக்குச் சென்றுள்ளனர். மீண்டும் அவர்கள் செல்வார்களானால் இன்று 'கோட்டா கோ கோம்' போராட்டத்தை முன்னெடுப்பது போன்று எங்களுக்கு எதிராக கோ கோம் என்னும் கூச்சலிடுவதற்குச் சந்தர்ப்பத்தை நாங்கள் வழங்கக்கூடாது" இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

## மதுபான சாலைகள் இருதினங்கள் பூட்டு

வெசாக் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 15ஆம் மற்றும் 16ஆம் திகதிகளில் நாடளாவிய ரீதியில் அனைத்து மதுபான விற்பனை நிலையங்களையும் மூட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மதுவரி ஆணையாளர் நாயகம் கபில குமாரசிங்க இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

குறித்த தினங்களில் விற்பனை நடவடிக்கைகளை மேற்கொள்ளும், அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறிச் செயற்படும் உரிமம் பெற்ற மதுபானசாலைகளுக்கு எதிராக சட்டம் கடுமையாக அமுல்படுத்தப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## விவசாய காணிக்குள் ஆண்ணின் சடலம் மீட்பு!

மட்டக்களப்பு – போரதீவுப்பற்று, நெல்லிக்காடு கிராமத்தில் விவசாய காணிக்குள் ஆண் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

போரதீவுப்பற்று கூழாவடி நெல்லிக் காடு கிராமத்தைச் சேர்ந்த அழகிப்போடி – தங்கராசா வயது 65, என்னும் நான்கு பிள்ளைகளுடைய குடும்பஸ்தரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வியாழக்கிழமை மாலை வீட்டிலிருந்து வெளியில் போன குடும்பஸ்தர் வீட்டுக்கு வராத காரணத்தால் உறவினர்களால் இரவு தேடுதல் மேற்கொண்டனர்.

இதன்போது நேற்று (வெள்ளிக்கிழமை) அதிகாலை வீட்டிலிருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள அவருடைய விவசாய காணியில் விவசாயத்துக்குப் பாவிக்கும் கிருமி நாசினி போத்தல் அருகில் கிடந்தவாறு சடலமாகக் கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

உறவினர்களால் வெல்லாவெளி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகை தந்து சம்பவம் தொடர்பில் தீவிர விசாரணைகளை வெல்லாவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

பொலிஸாரின் விசாரணை முடிவுற்றதும் சடலம் போரதீவுப்பற்று பிரதேசசபை வாகன உதவியுடன் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

## எம்.பிக்களின் பாதுகாப்பு அதிரடியாக அதிகரிப்பு!

அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்புக்காக உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர் உட்பட 6 அதிகாரிகளை நியமிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் அமைச்சர்களின் பாதுகாப்புப் பிரிவு இது தொடர்பில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்புக்காக குறித்த நியமனங்களை நியமிக்குமாறு பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 9 ஆம் திகதி ஏற்பட்ட அமைதியின்மையை தொடர்ந்து மக்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளை தீவைத்து வருகின்ற நிலையில் அவர்களின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.





## யாழில் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வாரத்தின் இரண்டாம் நாள் நினைவேந்தல்

யாழ்ப்பாணம், மே 14

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வாரத்தின் இரண்டாம் நாள் நினைவேந்தல் தமிழ் தேசிய மக்கள் முன்னணியால் யாழ்ப்பாணத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் செம்மணியில் நேற்று வெள்ளிக்கிழமை காலை 11 மணியளவில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்களால் ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் உட்பட கட்சியின் உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## கிழக்கில் இராணுவ சோதனைச் சாவடிகள் வீதி ரோந்து நடவடிக்கைகளும் முன்னெடுப்பு





நாடளாவிய ரீதியில் ஊரடங்கு சட்டம் நடைமுறையிலுள்ள நிலையில் அம்பாறை மாவட்டத்தின் பல பகுதிகளிலும் சோதனை சாவடிகள் அமைக்கப்பட்டு பெருமளவான பொலிஸார், இராணுவத்தினர் குவிக்கப்பட்டு சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்முனை, பெரியநீலாவணை, சாய்ந்தமருது, நிந்தவூர், சம்மாந்துறை, அக்கரைப்பற்று பொலிஸ் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருக்கின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள கடுமையான ஊரடங்கு சட்டம் காரணமாக மக்கள் ஆர்ப்பாட்டங்களைக் கைவிட்டு தத்தமது வீடுகளுக்குள் முடங்கியுள்ளனர்.

இராணுவத்தினர் பொலிஸார் இந்த மாவட்டத்தின் முக்கிய சந்திகளில் ரோந்து நடவடிக்கை மற்றும் சோதனை நடவடிக்கையைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

இதேவேளை இப்பகுதிகளில் நேற்று காலை பாடசாலைகள், அரச அரசார்பற்ற நிறுவனங்கள், வங்கிகள், வியாபார நிலையங்கள் திறக்கப்பட்ட போதிலும் மதிய நேரம் படிப்படியாக மூடப்பட்டிருந்ததுடன், வீதிகளும் வெறிச்சோடி காணப்பட்டன.

மேலும் சில இடங்களில் திறக்கப்பட்டிருந்த ஒரு சில வர்த்தக நிலையங்கள் பொலிஸாரின் தலையீட்டை அடுத்து மூடப்பட்டன.

அத்துடன் தேவையான போது துப்பாக்கிச் சூடு நடத்துவது உட்படச் சட்டத்தைப் பயன்படுத்துவதற்கு அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் பொலிஸ் தலைமையகம் அறிவுறுத்தியுள்ளது. பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கலவரக்காரர்கள் அல்லது வன்முறைக் குழுக்களால் உயிர் இழப்பு அல்லது கொள்ளைச் சம்பவங்கள் ஏற்பட வாய்ப்பு இருப்பதால் அவர்கள் வாகனங்களை நிறுத்திச் சோதனையிடும் நடவடிக்கையைத் தடுப்பதற்காக அதிகபட்ச நடவடிக்கைகளை எடுக்குமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அரச அல்லது தனியார் சொத்துக்களுக்குச் சேதம், கொள்ளை, உயிர் இழப்பு அல்லது பாரிய காயங்களைத் தடுப்பதற்கு அதிகபட்ச நடவடிக்கைகளை எடுக்குமாறு நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் பல வீதிகளில் இராணுவ வாகனங்கள் கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றன. அத்தோடு சோதனைச்சாவடிகளிலும் அதிகளவான இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் -10

# புலம்பெயர் மக்களின் எதிரொலியும் தாக்கமும்

ஆயுத கிளர்ச்சி நடத்தினார்கள்.

அப்பொழுது ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பதவியில் இருந்தார். அவர் சில சோலிச நடவடிக்கைகளை மேற்கொண்டு இருந்தாலும் அடிப்படையில் முதலாளித்துவவலதுசாரிபக்கத்திலேயே வளர்ந்தவர். அவர்களது வர்க்க அதிகார நலன்களுக்காக இந்தப் புரட்சி ராணுவத்தின் வன்முறைகளால் அடக்கப்பட்டது. இந்தத் தீவில் பாரிய இடதுசாரிக் கொள்கைகளை அமுல்படுத்த விரும்பும் அரசாங்கம் அமைவதை இந்தியாவும் மேலத்தேய நாடுகளும் விரும்ப



நாட்டில் இரண்டு தடவைகள் கிளர்ச்சியை முன்னெடுத்த ஜே.வி.பியினர்

வயிற்றுப் பசியினால் – அத்தியாவசிய தேவைகளை நிறைவு செய்ய முடியாததால் – அல்லது அத்தியாவசியப் பொருள்கள் கிடைக்காமையால் – இளைஞர்கள், குறிப்பாக ஓரளவு படித்த மத்திய வர்க்கத்தின் பிரதிநிதிகள், அவற்றுக்கான கோஷங்களுடன் காலிமுகத் திடலை முற்றுகையிட்டனர்.

பின்னர் அந்தக் கோரிக்கைகள், கோஷங்களில் சில முக்கியமான மாற்றங்களையும் அவர்கள் செய்தனர்.

அவை குறிப்பாக நாட்டின் அனைத்து மக்களையும் இணைத்துக்கொண்டதான ஒரு நாட்டு நிர்வாகம் – ஜனாதிபதி ஆட்சி முறையை நிறைவேற்று அதிகாரங்கள் கொண்ட நிலையில் இருந்து நீக்குதல் அன்றில் அந்த அதிகாரங்களை கட்டுப்படுத்துதல் – முழுமையான பொருளாதார சீர்திருத்தத்தைக் கொண்டு வருதல் என்பவற்றை உள்ளடக்கி இருந்தன.

இதுவரை நாட்டின் பொருளாதாரம் பொதுவாக வலதுசாரி பாதைகளில்தான் வளர்ந்தது. திறந்த பொருளாதாரத்தை ஆதரித்தாலும், இடையிடையே சோலிச கோட்பாடுகளும் தலை காட்டின. ஆயின், அவை முற்றுமுழுதான சோ–லிச பொருளாதாரத்தைப் பிரதிபலிக்கவில்லை. அப்படியான பொருளாதாரத்தை – அதாவது முழுமையான இடதுசாரித் தத்துவங்களை – தமிழ் மக்களும் ஆதரிக்கவில்லை.

வலதுசாரி பொருளாதாரக் கொள்கைகள் விரட்டப்பட்டு, உண்மையான சமதர்ம சோலிச பொருளாதாரக் கட்டமைப்பு மலர வேண்டும் என்றுதான் 1971 றோஹண விஜயவீரவின் தலைமையில் ஜே.வி.பி. அமைப்பின் பின்னால் சிங்கள இளைஞர்கள் திரண்டு இருந்தார்கள்.

வில்லை. இதுவே இன்னும் நிலைமை.

எல்லாவற்றுக்கும் மேலாக ஜே.வி.பியின் தலைவர் றோஹண விஜயவீர இந்தியாவிற்கு எதிரான நிலையை எடுத்தார். இந்தப் பிராந்தியத்தில் இந்தியாவின் ஏகாதிபத்தியம் தனது வர்க்க நலன்களுக்கு ஆதரவானது அல்ல என்று கருதினார். அது மாத்திரமல்ல, தமிழ் மக்கள் இந்தியாவின் அடிவருடிகளாக செயற்பட்டு, இந்தியா இலங்கையின் இறையாண்மையில் ஊடுருவ வழிவகுக்கக் கூடும் என்ற அரசியல் போதனைகள் தந்தார்.

இன்று காலிமுகத்திடலில் ஆதிக்கம் செலுத்தும் புத்திஜீவிகள் கணிசமானவர்கள் இடதுசாரி சிந்தனை கொண்டவர்களாகவும், இங்கு கட்டவிழ்ந்த பேரினவாதப் பொருளாதாரக் கொள்கைகளாலும், தமிழ் மக்களது ஆஸ்திகள் அவர்களது பிரதேசங்களில் அழிக்கப்பட்டமையாலும் நாடு எவ்விதமான அழிவு நிலையைச் சந்தித்திருக்கிறது என்பதை உணர்ந்தவர்களாகவும் இருக்கி றார்கள்

தமிழ் மக்களைத் தங்கள் சொந்தப் பிரதேசங்களின் பொருளாதாரத்தை புனர்நிர்மாணம் செய்து, அவற்றைக் கட்டியெழுப்ப விடுவதால், அவை எவ்வளவு தூரம் நாட்டின் பொருளாதார சிக்கல்களுக்கு தீர்வும் உதவியும் தரும் என்பதைக் கணித்தவர்களாகவே அவர்கள் தென்படுகிறார்கள். அந்தக் கருத்துக்கள் பொருளாதார நிபுணர்கள், சமூக ஆர்வலர்கள், புத்திஜீவிகள் போன்றவர்கள் மட்டத்திலும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

தமிழ் மக்களின் தன்னிறைவான பொருளாதாரம் நாட்டுக்கு உகந்தது, அது நாட்டின் பொதுவான பொருளாதார வளர்ச்சிக்குப் பெரிதும் உதவும் என்பதும் அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. அப்படியான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய காலமும் இதுதான் என வெளிப்படையாகக் காலிமுகத் திடலில் பேசப்படுகின்றது.

ஆனாலும் இந்தப் பொருளாதார உணர்வுகள், அவை இனப்பிரச்சினைத் தீர்வின் அங்கமாக அல்லாது பொருளாதாரத் தன்னிறைவு காணும் திட்டங்களும் அதிகாரங்களும் என்றே பார்க்கப்படுகின்றன. பெரும்பான்மை மக்கள் கூட அந்த நிலையிலேயே பார்க்கிறார்கள்.

அரசியல் மாற்றங்கள், ஊழல் நிறைந்த அரசியல்வாதிகள் வெளியேறுவது என்ற கோரிக்கைகளில் சர்வதேசம் அக்கறை கொண்டிருந்தாலும், அவர்களது புவியியல் அரசியல் பார்வைகளும் சூழ்நிலைகளும் அங்கு சடுகுடு ஆடுபவர்களையும், தமது வர்க்க நலன்களையும், வர்த்தகத்தையும்தான் முக்கியமாகக் கணக்கிடுகின்றன.

இவற்றில் இழையோடி, தமிழ் மக்கள் தங்களது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பத் தேவையான அனுசரணைகளையும் அதிகாரங்களையும் கட்டமைப்புகளையும் இந்த புத்திஜீவிகளோடு – சமூக ஆர்வலர்களோடு – அரசியல்வாதிகளோடு – தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் பேச்சுக்களிலும் ஊடாட்டங்களிலும் நிலைநிறுத்தி, மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும்.

காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் இடையே ஜே.வி.பியின் தாக்கமும், இடதுசாரி கட்சிகளின் வளர்ச்சிகளும், பிரசன்னமும் கோட்டாவின் அரசினால் மட்டுமல்ல, சர்வதேசத்தால் கூட அவர்களது புலனாய்வு அறிக்கைகள் மூலம் அறியப்பட்டுள்ளன.

அதனால் மட்டும், காலிமுகத் திடல் போராட்டக்காரர்களுக்கு எதிராக மஹிந்த தனது திட்டங்களைக் கட்டவிழ்க்கவில்லை. அது தனது அதிகாரங்கள் பறிபோகலாம் என்ற அவஸ்தையில் நடத்தப்பட்டது. ஆனாலும் அவர்களுக்கு இடையே வளரும் இந்தக் கருத்தாக்கங்கள் பேரினவாதத்தின் மூலகங்களை நீர்த்துப் போக விடக்கூடாது என்ற சிந்தனையையும் தருகிறது. அதேசமயம் அரச அதிகாரத்தில் இருந்து தங்களை அகற்றும் சிந்தனை முளையிலேயே கிள்ளி விட வேண்டும் என்ற பாங்கும் முன் நிற்கின்றது.

கோட்டா வெளியேறவேண்டும் என்ற கோஷங்கள் தொடர்ந்த நிலையிலும் – மஹிந்தவும் குழுவினரும் கைது செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் வலுத்து வந்தாலும் – அவர்கள் கவலைப்பட்டவர்களாகவோ அக்கறை கொண்டவர்களாகவோ தெரியவில்லை.

மக்கள் எழுச்சியை அடக்கத் தயாராக ராணுவத்தைக் களத்தில் இறக்கியுள்ளார் கோட்டா. அதே சமயம் புலனாய்வின் மூலம் போராட்டத்துக்கு ஆதரவு தந்த 59 சமூக முகநூல் குழுக்களின் முக்கியமானவர்களை விசாரணைக்கு உட்படுத்த ஒழுங்குகள் செய்யப்படுகின்றன.

அமைதியான போராட்டங்களை நடத்தியவர்களே தேடப்பட்டு விசாரிக்கப்படுகிறார்களேயொழிய, வன்முறையைத் தூண்டியவர்களை முழு நாடும் ஒன்று சேர்ந்து குற்றம் சுமத்திய போதும், அவர்கள் வலுவாகப் பாதுகாக்கப்படுகிறார்கள்.

அவர்கள் பழைய ஜனாதிபதியும் அவரது குழாமும் என்பதால் பாதுகாக்கப்பட வேண்டிய கடமை தங்களுக்கும் உண்டு என இராணுவத் தளபதி திமிருடன் அறிவிக்கிறார் – அரசன் எதுவும் குற்றம் செய்வதில்லை என்ற நியதியில்.

அதிகாரங்கள் தங்களுக்குள்ளேயே, தங்களது வர்க்க நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காகவே, புதிய தலைவர்களின் பெயரில் இடைக்கால அரசும் ஏற்படுத்தப்படுகிறது

காலிமுகத்திடல் அடுத்த தேர்தலிலாவது ஒரு புதிய சக்தியை ஒரு சம நிலையை கொண்டுவர கூடியவர்களாக ஆக்கிக் கொள்ள வாய்ப்புக்கள் அதிகமாக தென்படுகின்றன. இந்த புதிய சக்திகளுடன் தமிழ்மக்கள் தங்கள் நட்பு உறவுகளை பலப்படுத்திக் கொள்வது மட்டுமல்ல,

தங்களிடையே சாதகக் கட்டுக்களைப் புரட்டிக்கொண்டு இருப்பவர்களையும், தூங்குபவர்களையும், சங்கு ஊதிக் கொண்டிருக்கும் பாமரர்களையும் வரும் அதிகாரம் எதுவானாலும் அதற்கு ஜல்ரா போடுவதிலேயே காலம் கழிப்பவர்களையும் அறிந்து கொண்டு புதிய சிந்தனைகளும் உத்வேகமும் உள்ள இளைஞர்களை ஊக்குவித்து ஆதரவுதரவேண்டும்.

(வளரும்)